கலை இலக்கியத் திங்களிதழ்

# கணையாழி

மலர் : 57 இதழ் : 02 மே 2022 விலை ரூ.25/-



## மானுடம் போற்றுதம்மா!! – ம.ரா.

# உள்ளடக்கம்


கட்டுரை

| | |
|---|---|
| கவிஜி | 06 |
| மு. இராமசுவாமி | 17 |

சிறுகதை

| | |
|---|---|
| ப. தனஞ்ஜெயன் | 11 |
| கே.எஸ்.சுதாகர் | 25 |
| செய்யாறு தி.தா.நாராயணன் | 32 |
| ந. ஜெயரூபலிங்கம் | 41 |
| வாசுதேவன் அருணாசலம் | 49 |
| தெலுங்கில் தும்மல ராமகிருஷ்ணா தமிழில் : பா.அ.முனுசாமி | 56 |
| குறுநாவல் போட்டி | 24 |

கடைசிப் பக்கம்

| | |
|---|---|
| இந்திரா பார்த்தசாரதி | 69 |

கவிதை

| | |
|---|---|
| சன்மது | 10 |
| சாய் | 16 |
| ப்ரியா பாஸ்கரன் | 23 |
| ந.சிவநேசன் | 29 |
| ரகுநாத் வ | 30,31 |
| நேசன் மகதி | 38 |
| கி.சரஸ்வதி | 39,40 |
| சாமி கிரிஷ் | 40 |
| புலமி | 54 |
| தசாமி | 54 |
| சே கார்கவி | 55 |
| இளையவன் சிவா | 55 |
| வீரசோழன் திருமாவளவன் | 68 |


## வணக்கம்

கணையாழி தற்போது மின்னிதழாக மட்டும் வெளிவந்து கொண்டிருக்கிறது. அன்புகூர்ந்து **www.kanaiyazhi.com** அல்லது **magzter.com** பாருங்கள்..

அச்சு இதழாக வரும் வாய்ப்பு இப்போது இல்லை உங்கள் சந்தாவை மின்னிழுக்கானதாக மாற்றலாம் அல்லது மீதித் தொகையைத் திருப்பி அனுப்பலாம். உங்கள் விருப்பத்தைத் தெரியப்படுத்தி உதவுங்கள்.. நன்றி.




சிறுகதை

வாசுதேவன் அருணாசலம்


# நீங்கெல்லாம் எங்கடா உருப்படப் போறீங்க!

அன்று மதியம் இரண்டு மணிக்கே சௌந்தர் வீட்டிற்கு வந்துவிட்டார். தன் துணைவி, அம்பிகாவிடம், "சரண் இன்னும் காலேஜிலிருந்து வரலியா?" என்று கேட்டார்.

"வரலீங்க! இன்னைக்குக் கொஞ்சம் லேட் ஆகுமாம். மதுரை வரைக்கும் போயிட்டுவரேனு சொன்னான். ஏதோ டோர்னமெண்ட்டாம்."

என்கிட்ட எதுவும் சொல்லவேயில்ல!"நீங்க ஆஃபிஸ் போனதுக்கு அப்புறம்தான் அவனுடைய ஃப்ரட்ண்ஸ்கிட்டயிருந்து போன் வந்ததுங்க..."

"ஏன்! எனக்கு போன்பண்ணிச் சொல்லமுடியாதா?"

"இல்லீங்க! அவன் பண்ணுறேனுதான் சொன்னான். நான்தான் . . . நான் போன்பண்ணிச் சொல்லிக்கிறேனு சொல்லிட்டேன். பண்ணணும்தான் நினைச்சேன். இந்து அம்மா வந்தாங்க. பேசிக்கிட்டுருந்ததுல அப்படியே மறந்துபோய்ட்டேனுங்க!"

அவனக் கெடுக்கிறதே நீதான்! ஒழுங்கா ஒரு ஸ்கூலில் படிச்சிக்கிட்டு வந்தான். நீ தான் அங்க மாத்து இங்க மாத்துனு, அவங்க சொன்னாங்க, இவங்க சொன்னாங்கன்னு...சொல்லி மாத்தி அவன் ஸ்டடீஸே போச்சு! ஒழுங்கா அதே ஸ்கூலில் படிச்சிருந்தானா நல்ல மார்க் எடுத்திருப்பான். ஒரு இன்ஜினியரிங் காலேஜில் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கலாம். இங்க ஆர்ட்ஸ் காலேஜில் ஹிஸ்ட்ரி படிச்சு எங்க போகப் போறானுதெரியல. நினச்சாத் தூக்கம் வரமாட்டேங்குது! இதுல வேற... மட்டையைத் தூக்கிக்கிட்டு ஆடுறான். எங்க போய் முடியப்போகுதோ! இங்க இருக்கிற டோர்னமெண்டெல்லாம் பத்தாதுனு அடுத்த டிஸ்ட்ரிக்ட் போறானாம்!" என்றார் சௌந்தர்

அம்பிகா எதுவும் பேசவில்லை. சில வினாடிகள் கழித்து, "சாப்பாடு எடுத்து வைக்கட்டுமா?" என்று தாழ்ந்த குரலில் கேட்டாள்."நீ சாப்பிட்டியா?" என்றார்."சீக்கிரமே வந்துடுவேனு சொன்னீங்கன்னு... வெயிட் பண்ணினேன்...

தலைவேற வலிக்க ஆரம்பிச்சிடுச்சு! அதான் கொஞ்சம் ரசம் சாதம் மட்டும் போட்டு சாப்பிட்டேன். உங்களுக்கு எடுத்து வைக்கிறேன் வாங்க.'' என்று சமையலறைக்கு நகர்ந்தாள். "உனக்கும் எடுத்துக்கிட்டு வா!''என்று கையைக் கழுவிவிட்டு சாப்பாட்டு அறை மேஜை முன் அமர்ந்தார் சௌந்தர். இரவு பத்துமணிக்கு சரணின் இரு சக்கர வாகனம் நிறுத்தப்படும் சத்தம் வெளியில் கேட்டது. சௌந்தர் சு. வெங்கடேசனின் "காவல் கோட்டம்'' முதற்பாகத்தின் ஐம்பத்திரண்டாம் அத்தியாயத்தை வாசித்துக்கொண்டிருந்தார். "மார்ச் 31, 1847....'' பிளாக்பர்ன் தன்னுடைய பிரிவு உபச்சார விழாவின் உரை. மதுரை விளக்குத்தூண் அமைக்கப்பட்ட வரலாற்று நிகழ்வு. அம்பிகா வீட்டின் கதவைத் திறந்துவிட்டார். சரண் மெதுவாக உள்ளே வந்தான். வெளியறையிலிருந்த ஷூ ஸ்டேண்டில் தன்னுடைய ஷூக்களை கழற்றி வைத்துவிட்டு உள்ளே நுழைந்தான். மனதில் ஒரு கலக்கத்துடனேயே இருந்தாள் அம்பிகா. "போயி குளிச்சிட்டு வா! கெய்ஸர் போட்டு வச்சிருக்கேன். கொஞ்சம் சூடா ஊத்து. முகமெல்லாம் கருத்துப்போய்! ஏன்டா! இப்படி! போ! போயிட்டு சீக்கிரம் வா!'' என்றாள் அம்பிகா.

சரண் சிறிது நேரம் கழித்து பாத்ரூமிலிருந்து வெளியேவந்தான். அம்பிகா ஹாலில் சாப்பாடு எடுத்து வைத்திருந்தாள். சரணுக்கு ஹாலில் தரையில் அமர்ந்து டிவி பார்த்துக் கொண்டே சாப்பிடுவதுதான் வழக்கம். சாப்பாட்டு அறை மேஜையை அவன் பயன்படுத்துவதேயில்லை. டிவி வேண்டாம் என்று சைகையிலேயே அம்பிகா சரணிடம் சொன்னாள். எதற்காகத் தன்னுடைய அம்மா வேண்டாம் என்கிறாள் என்பதைச் சட்டென்று சரண் புரிந்துகொண்டான். இன்னும் சற்று நேரத்தில் நடக்கப்போகும் பிரளயத்தை எதிர்பார்த்தபடி ஒரு பதற்றத்திலேயே அம்பிகா இருந்தாள். சௌந்தர் படுக்கையறையைவிட்டு வெளியில் வரவில்லை. அம்பிகா சைகையிலேயே சரணிடம் "போய்த் தூங்கு. செல்போனில் வீடியோ கேம் எதுவும் வேண்டாம்'' என்று தெரிவித்தாள். "நான் பார்த்துக்கொள்கிறேன்'' என்று சரணும் சைகையிலேயே பதில் சொல்லிவிட்டு தனது படுக்கையறைக்குச் சென்றான். அம்பிகா சமையலறை ஸிங்க்கில் கிடந்த பாத்திரங்களைக் கழுவ ஆரம்பித்தாள். சற்று நேரத்தில் சரணின் படுக்கையறையிலிருந்து சௌந்தரின் குரல் கேட்டுத் திடுக்கிட்டாள். கைகளை வேகவேகமாகத்துடைத்துக்கொண்டு சரணின் அறையை நோக்கி விரைந்தாள். "நீங்கெல்லாம் எங்கடா உருப்படப் போறீங்க...'' என்று கத்திக்கொண்டே சௌந்தர் வெளியேறிக்கொண்டிருந்தார். அம்பிகாவிற்கு ஓர் ஏளனப்பார்வை ஒன்று சௌந்தரிடமிருந்து கிடைத்தது. சரணின் அறைக்குள் அம்பிகா நுழைந்தாள். அவனுடைய செல்போனை வாங்கிக்கொண்டு "படுத்துத் தூங்கு. காலையில எடுத்துக்கோ ...'' என்று கூறி அறையைவிட்டு வெளியேறினாள். ஹாலிலிருந்த செல்போன் சார்ஜரில் சரணின் போனை இணைத்துவிட்டு சௌந்தரின் அறைக்குச் சென்றார். சௌந்தர் கட்டிலின் தலைப்பக்கமிருந்த உயரமான கட்டில் தடுப்பில் முதுகைச் சாய்த்து கால்களை நீட்டியபடி உட்கார்ந்திருந்தார். கோபத்தின் கனல் முகத்தில் எரிந்துகொண்டிருந்தது. "நீ...'' என்று சௌந்தர் பேச ஆரம்பித்தபோது. தன் வலதுகையை உயர்த்தி "கொஞ்சம் நிறுத்துறீங்களா?'' என்றாள் அம்பிகா. அவளின் வார்த்தைகளிலிருந்த உறுதி சௌந்தரை எதையும் மேலும் பேசவிடவில்லை."ஏன் இப்படி எல்லா அப்பாக்களும் ஒரே மாதிரி இருக்கீங்க?

எதையும் புரிஞ்சுக்கனும்னு ஏன் முயற்சி செய்வதேயில்லை. உங்க அப்பா பேச்ச நீங்க ஒழுங்கா கேட்டிருக்கிறீங்களா? என்னைக்கும் அவரோட மல்லுக் கட்டிகிட்டுதான் கிடந்தீங்க! அவர் சொன்ன வேலையை விட்டுப்புட்டு நீங்க நினைச்ச வேலையைத்தான் எடுத்தீங்க! கெட்டா போயிட்டீங்க! உங்களோட சுயபுத்தி என்ன சொன்னதோ அதைத்தானே கேட்டீங்க! வேற யார் சொன்னாலும் கேட்கலயே! நல்லா இருக்கீங்கல்ல! அதை ஏன் புரிஞ்சுக்கமாட்டேங்கறீங்க! என் தம்பிமாதிரி ஒரு உதவாக்கரையை ஊர்ல பார்க்க முடியாது. அப்படி ஒரு ஒழுங்கீனம். எங்கப்பா அவனாலேயேதான் செத்தார். இன்னைக்கு அவன் எஸ் பி ஐ-இல் ரீஜனல் மேனேஜர். யாரும் நம்ப மாட்டாங்க. ஓரளவுக்குதானுக்கு நாம அவுங்க விசயத்துல தலையிடனும். இப்ப இருக்கற ஜெனரேஷன் அப்படி! அவங்களுக்கு என்ன வேணும்னு அவங்களுக்கு, பெத்தவங்களவிட நல்லாத் தெரியும். யாரும் கொஞ்சம் தலையிடாம இருந்தா போதும். கொஞ்சம் அமைதியா இருங்க! அவனுடைய லைஃப்வ எப்படி அமைச்சுக்கணும்னு அவனுக்குத் தெரியும். நாம என்ன, அவனுக்கு செய்ய முடியுமோ, அதைச் செஞ்சிட்டாப் போதும்" என்று முடித்தாள் அம்பிகா.

"பிரச்சினை அவன் இல்லடி! நீதான்!. எங்க காலம் வேற! இப்ப இருக்கிற காலம் வேற! இதத் தெரியாமா நீ லெக்ச்சர் அடிக்கிற! அன்னைக்கு வேலை எங்கள தேடிவந்தது. இன்னைக்கு வேலைய நாம தேடிப்போனாலும் அது கிடைச்சபாடில்ல....முதல்ல இத புரிஞ்சுக்கோ! விடிய விடிய வீடியோ கேம் ஆடுறான். முடிஞ்சதுக்கப்புறம் மட்டையைத் தூக்கிட்டு ஆடுறான். இப்படி இவன் செய்யறத பார்த்தா எனக்கு தூக்கம் வரமாட்டேங்குது! இதுல, நீ வேற அவனுக்கு வக்காலத்து! வீடியோ கேம் விளையாடுறப்ப அவனுக பேசுற டயலாக்கக் கேட்டிருக்கியாடி! போடுறா! கொல்லுடா! தூக்குடா! காலிபண்ணுடா! ஏதோ... பெய்ட் அஸாஸின்ஸ் மாதிரி பேசிக்கிட்டு! உண்மையிலேயே சகிக்க முடியலடி! நல்ல தூக்கம் கிடையாது! தூக்கத்தைக் கெடுத்து அப்படி ஒரு விளையாட்ட விளையாடனுமா? என்னைக்கு விடிவுகாலம் வருமோ! கடவுளுக்குத்தான் வெளிச்சம்!" என்று அடுத்து எதுவும் பேசுவதற்குத் தயாராக இல்லை என்பதுபோல் கட்டிலின் தடுப்பில் சாய்த்திருந்தவர் உடம்பைக் கீழிறக்கி தலையணையை, சரிசெய்து வலதுகையை மடக்கி, தலைக்கு அண்டக் கொடுத்து மல்லாக்கப்படுத்தார்.

மறுநாள் காலை கேட்டில் சொருகி வைத்திருந்த தி ஹிந்து ஆங்கிலப் பத்திரிகையை ஒரு கையில் பிடித்துக்கொண்டு மதில்மேல் வைக்கப்பட்டிருந்த பால் பாக்கெட்டை மற்றொரு கையில் எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தார். சமையலறையில் பால் பாக்கெட்டை வைத்துவிட்டு வெளியறையில் இருந்த நாற்காலியில் அமர்ந்து பத்திரிகையை வாசிக்கத் தொடங்கினார். சிறிது நேரத்தில் அம்பிகா ஒரு தம்ளரில் காப்பியைக் கொண்டுவந்து நீட்டினார். சௌந்தர் வாங்கிக்கொண்டு. "உனக்கு?" என்றார். "இந்தா எடுத்துட்டு வரேன்!" என்றபடி அங்கிருந்து சென்றார். பத்திரிகையைப் படிக்காமல் பாதியிலேயே அப்படியே வைத்துவிட்டு காப்பியை அருந்தினார். அம்பிகா சில வினாடிகளில் அங்கே ஒரு தம்ளரோடு வந்தாள். "என்ன எந்திரிச்சுட்டானா!" என்றார். "இல்லீங்க... தூங்கிட்டுதான் இருக்கான்!" என்றார் அம்பிகா. சில நிமிட மௌனத்திற்குப் பின் "சரி... நான் கிளம்புறேன்!" என்று சௌந்தர் எழுந்தார். வழக்கத்திற்கு மாறாக அன்று, தான் படித்த எந்தச் செய்தியையும் அம்பிகாவிடம் பகிரவில்லை.சௌந்தர்

தன்னுடைய இருசக்கர வாகனத்தில்தான் தனது அலுவலகத்திற்குச் செல்லுவார். உத்தமபாளையம் தாசில்தார். ராயப்பன்பட்டியிலிருக்கும் தன் வீட்டிலிருந்து எட்டு கிலோமீட்டர். அரசு தேர்வின்மூலம் வேலைக்குச் சேர்ந்தவர். வாங்கும் சம்பளத்திற்கு உழைக்கவேண்டும் என்பவர். யாருக்கும் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து வாழ்க்கைக்கு அர்த்தம் தேடவேண்டும் என்ற சித்தாந்தத்தால் பாதிக்கப்படாத ஒரு 'பழமைவாதி.' தன்னுடைய மகனின் வாழ்க்கை சிறப்பாக அமையாமல் போய்விடுமோ என்ற பயத்திலேயே, அவனுடைய பழக்க வழக்கங்களை எவ்வாறு மாற்றுவது என்பதை யோசித்தபடியே, தன்னுடைய இருசக்கர வாகனத்தில் பயணித்துக்கொண்டிருந்தார். ஆனைமலையான்பட்டியை நெருங்கிக்கொண்டிருந்தபோது, ஒரு முதியவர் இடது கையிலிருந்த தடியை, தரையில் ஊன்றியவாறு வலது கையை நீட்டி சௌந்தரின் வண்டியை நிறுத்த சைகை செய்தார். சௌந்தர் அந்த முதியவரைப் பார்த்தார். இருந்தாலும் தனது வாகனத்தை நிறுத்தவில்லை. அவரைத் தாண்டிச் சென்றார். இருநூறு மீட்டர் சென்றிருப்பார். தன்னைத்தானே நொந்துகொண்டார். "என்ன மனுஷன்டா நீயெல்லாம்! ஒரு முதியவரை உன் வண்டியில் ஏற்றிக்கொண்டு கொஞ்ச தூரம் கொண்டுபோய்விட முடியாதா?" என்று தனுக்குள் கேட்ட குரல் வாகனத்தை நிறுத்தியது. முன்னும் பின்னும் யாரும் வரவில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு வந்த வழியில் வாகனத்தை, சௌந்தர் திருப்பினார். அந்த முதியவர் நின்றுகொண்டிருந்த இடத்தை நோக்கிச் சென்றார். அங்கே ஓர் இளைஞனின் ஆக்டிவ் ஹோண்டா 5 ஜி இருசக்கர வாகனத்தில் அந்த முதியவர் மெதுவாக ஏறிக்கொண்டிருந்தார். அந்த இளைஞனின் காதுகளில் ஹெட்போன் மாட்டப்பட்டிருந்தது. பின் மண்டையில் சின்னக் கொண்டை. உச்சி மண்டையில் நெளிந்து நெளிந்து செல்லும் கம்பி குறுக்காக. தலைமுடி நெளிந்து நெளிந்து நெற்றியின் மேல்விளிம்பிலிருந்து பின்மண்டையில் போடப்பட்டிருந்த கொண்டைவரை முடிச் சால்களாக வழிந்துகொண்டிருந்தது. அரைக்கால் ட்ரௌசர். காலர் இல்லாத கசங்கிப்போன டி-சர்ட், தான் அந்த முதியவருக்கு ஒரு பெரிய உதவி செய்து கொண்டிருக்கிறோம் என்ற எண்ணம் ஒரு பொட்டுக்கூட முகத்திலோ அங்கத்திலோ எங்கும் காணப்படவில்லை. சௌந்தர் சாலையின் எதிர் ஓரத்திலிருந்து அந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டே இருந்தார். அந்த இளைஞன் சௌந்தர் பக்கம் திரும்பிக்கூட பார்க்கவில்லை. வாகனத்தில் முதியவரை ஏற்றிக்கொண்டு அங்கிருந்து சென்றான். சௌந்தர் தனது இருசக்கர வாகனத்தை திருப்பிக்கொண்டு தனது அலுவலகத்தை நோக்கி விரைந்தார்.

"ஏங்க! வாட்ஸ் அப் பாருங்க!" என்று அம்பிகா சரியாக 10:30 மணிக்கு சௌந்தரை கைபேசியில் அழைத்துக் கூறினாள். தனது கைபேசியை எடுத்து டேட்டா நெட்வொர்க்


**புத்தகங்கள் அச்சிட அற்புதத் தீர்வு**

**குறைந்த செலவு**
**அதிகபட்ச தரம்**

அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**

பொத்தானை அழுத்தி வாட்ஸ்அப் செயலியை இயக்கினார். வாட்ஸ்அப் பக்கத்தில் அம்பிகாவின் எண்ணை 'பின்' செய்து வைத்திருந்தார். ஒரு புகைப்படத்தை அம்பிகா அனுப்பியிருந்தார். அதை கிளிக் செய்து பார்த்தார். அன்று காலையில் அவர் கடைசிப் பக்கம்வரை வாசிக்கத் தவறிய பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்ட செய்தித் துண்டு. சரணின் சிறிய புகைப்படம் நடுவில். விளையாட்டுப் பக்கம். மதுரை ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் நடந்த போட்டியில் 23 பந்துகளில் 68 ரன்கள் எடுத்து அவனது அணிக்கு வெற்றியைத் தேடித்தந்திருந்தான் சரண். செய்தியைப் படித்துக்கொண்டிருக்கும் நேரத்தில் தேனி மாவட்ட கலெக்டர் அலுவலகத்திலிருந்து தகவல். மதுரையில் தாசில்தார்கள் சந்திப்பாம். எதிர் வருகின்ற தேர்தல் பணிநிமித்தமாம். அன்று மதியம் 03:00 மணிக்காம். அம்பிகாவிற்கு வாட்ஸ்அப் செயலியிலேயே செய்தியைப் பகிர்ந்துகொண்டு மதுரைக்குக் கிளம்பினார். மாலை 07:15 -க்கு அம்பிகாவிற்கு சௌந்தரிடமிருந்து கைபேசி அழைப்பு வந்தது. "வசந்த் நம்பர் வச்சிருக்கியா?" என்றார். வசந்த், சரணின் நெருங்கிய கிரிக்கெட் நண்பன். "ம்.. இருக்குங்க.." என்றார் அம்பிகா. ஏன் எதற்கு என்று அம்பிகா கேட்கும்முன், "அனுப்பு" என்று கூறி கைபேசி அழைப்பைத் துண்டித்தார். வசந்தை அழைத்தார். பேசினார். "விளக்குத்தூண் பக்கத்தில் பாம்பே டையிங் ஷோரூம் மாடியில் அங்கிள்!" என்றான் வசந்த். கடைக்குச் சென்றார். வசந்திடம் பெற்ற தகவல்களின் அடிப்படையில் அனைத்தையும் வாங்கினார். விலையுயர்ந்த பேட், லெதர் கிளவ்ஸ் இரண்டு செட், லைட்வெயிட் லெக் பேடு இரண்டு செட், ஸ்போர்ட்ஸ் ஷூக்கள் இரண்டு (நம்பர் 9), சாக்ஸ் நான்கு செட்., ஹெல்மெட் ஒன்று, ஜெஸ்ட் பேடு ஒன்று, எல்போ புரோடெக்டர், அப்டமன் கார்டு, நீல வண்ண 4 x 2 x 2 கிட் பேக் ஒன்று. இரவு 11:45 -க்கு ஊர் வந்து சேர்ந்தார் சௌந்தர். அம்பிகா வாசல் கதவைத் திறந்தாள். பெரிய கிட் பேக் தோளில் தொங்கிக்கொண்டிருக்க நின்றுகொண்டிருந்தார் சௌந்தர். இரண்டு கதவுகளையும் திறந்து பெரிய கிட் பேக்கை வாங்க முற்பட்டாள். "வேண்டாம். ரொம்ப வெயிட். தூக்க முடியாது" என்று அங்கே இறக்கிவைத்தார். "என்னதுங்க இது?" என்று வினவினாள் அம்பிகா. "சரணுக்கு! கிரிக்கெட் கிட்" என்றார். அம்பிகா கிட் பேக்கைத் திறந்து அதிலிருக்கும் அனைத்தையும் ஒவ்வொன்றாகப் பார்த்தார். "ஏங்க! எவ்வளவுங்க?" என்றார் அம்பிகா. "அதெல்லாம் உனக்குத் தேவையில்லாதது!" என்று கூறிக்கொண்டே உள்ளே சென்றார். ஹாலில் சரணின் செல்போன், சார்ஜரில் இணைக்கப்பட்டிருப்பதைப் பார்த்தார். "நான் தான் சொன்னேங்க!" என்றார் சௌந்தரைத் தொடர்ந்து அங்கு வந்த அம்பிகா. செல்போன் சார்ஜரின் இணைப்பைத் துண்டித்தார். செல்போன் "டிடிங்" ஒலி எழுப்பியது. செல்போனின் ஒலியை நன்றாகக் குறைத்தார். சரணுடைய அறைக்குச் சென்றார். சரண் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தான். அவனுடைய கட்டிலுக்கு அருகிலிருந்த மேஜைமீது அவனுடைய செல்போனை வைத்து மேஜைக்கு அருகிலிருந்த ப்ளக் பாயிண்டில் செல்போன் சார்ஜரை இணைத்துவிட்டு மெதுவாக அறையைவிட்டு வெளியேறினார் சௌந்தர். சில நிமிடங்களில் குளித்துவிட்டு வந்தார். தன்னுடைய பேக்கிலிருந்து இரண்டு பொட்டலங்களை எடுத்தார். "காலேஜ் ஹவுஸ்ஸில் இரண்டு பெப்பர் புரோட்டா வாங்கிட்டுவந்திருக்கேன். ஒண்ண ஃப்ரிட்ஜில் வச்சு நாளைக்கு சூடுபண்ணி, சரணுக்குக் கொடுத்திடு. இத நாம சாப்பிடுவோம்" என்று ஹாலில் தரையில் அமர்ந்தார் சௌந்தர்.

vasuaruntamil@gmail.com